www.tamilarangam.net

# தேசிய இனப் பிரச்சனையை தீர்ப்பவர் யார்?

கலாநிதி:
விக்கிரமபாகு கருணாரத்ன



நவ சமசமாஜ வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனப் பிரச்சனையை

# தீர்ப்பவர் யார்?

1. இந்திய அரசுடன் ஜே. ஆர். புதிதாகப் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்த்த பலர் அவர் வெற்றியுடன் திரும்பியதாகக் கூறியதைக் கேட்டு சற்று மகிழ்ந்தனர். ஆனால் பேச்சுவார்த்தையில் உண்மையான உடன்படிக்கை யாது என ஒன்றுமே வெளிப்படுத்தப்படவில்லை. இருந்தும் இரு முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டன. முதலாவது அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்குவதுடன் தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஏதாவது ஒருவிதமான சுயாட்சியைக் கொடுக்கவேண்டி இருப்பது இரண்டாவது படையினருக்கும் தமிழ் விடுதலை போராளிகளுக்கு மிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஒரு பரஸ்பர உடன்படிக்கை வேண்டுமென்பது ஒரு சமாதானத் தீர்வு காண்பதற்கு உரிய முறை விடுதலைப் போராளிகளை வலியுறுத்துவதற்கு இந்திய அரசு உடன்பட்டதாகத் தெரிகிறது. ஜே. ஆர் எவ்வளவு தூரத்துக்கு இத்துறையில் வெற்றி காண்பார் என்பதும், இத் தீர்வுகள் தானா உண்மையில் வழி என்பதும் இன்று எழுந்துள்ள முக்கிய கேள்விகளாகும்.

2. ஒரு விடயம் தெளிவாகிறது. இத்தீர்வை காண்பதற்கு முதலாளித்துவ வர்க்கம் ஒற்றுமைப்படவில்லை. என்பதே ஆகும். சிங்கள நடுத்தர வர்க்கத்துக்குச் சாதகமாக இருக்கக் கூடியது என்றும் கருத்தை உள்ளடக்கி தன்னதிகாரம் கிடைத்தால் இத் தீர்விலும் பார்க்க நல்லதொரு தீர்வை தன்னால் காணமுடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமா பண்டார நாயக்கா கூறி இருக்கிறார். அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த தன்னை இந்தியா சந்தேகக் கண்ணுடன் பார்க்காதென்றும், அமெரிக்காவைச் சார்ந்த ஜே. ஆரை சந்தேகக் கண்ணுடன் முறைத்துப் பார்க்கும் என்றும் வாதிடுகிறார் அத்துடன் ஏகாதிபத்திய சார்பு பொருளாதாரக் கொள்கைகள் தமிழ் முதலாளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்களை ஒதுக்கியுள்ளது. ஆனால் அவர்கள் கூடிய நம்பிக்கை உள்ளவர்கள் எனவும் தன்னுடன் உள்ள கருத்தை வேற்றுமை சற்றுக் குறைவாக மட்டுமே இருக்கும் எனவும் வாதிடுகிறார்.

3. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமல்லாது பிரேமதாசாவை சார்ந்த பல மந்திரிகள் உட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் கூட இத் தீர்வை ஏற்கவில்லை. கிராம சபைகளுக்கும் கிராமோதய சபைகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான அதிகாரம் கொடுக்கப்படக் கூடாதென பிரேமதாச வலியுறுத்தி உள்ளார். இக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொது மாவட்ட அபிவிருத்திசபை கூட ஒரு இணைப்புக் குழுவாக மட்டுமே இருக்கும். இந்திய அரசுக்கு எதிரான மார்க்ஸிய பயமுறுத்தலை எதிர்க்கும் அடிப்படையில் தான் இந்தியாவுடன் உடன்படிக்கை இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து தமிழர் விடுதலை என்னும் போர்வைக்குள் வளரும் உண்மையான புரட்சிகர கிளர்ச்சியின் அபாயத்தை இந்தியத் தலைவர்களுக்கு உணர்த்த வேண்டும். அமெரிக்கா பக்கம் சாயும் நிலைக்கு ரஜீவ் மாறும் வேளையில் தனது நிலைமை எதிர்காலத்தில் செல்வாக்கடையும் என பிரதமர் நம்புகிறார். தமிழ் தீவிரவாதிகளை அடக்கிய பின்னர் எஞ்சிய பிரச்சனைகளை கிராமோதய சபை மூலம் தீர்க்க முடியும் என்றும் எண்ணுகிறார்.

4. மேற் கூறப்பட்ட இந்த பிரதானமான முதலாளித்துவ முகாம்களைத் தவிர இனவாதிகள் இருக்கிறனர். வடக்கிலோ அல்லது வேறெங்கேயாவது வாழும் தமிழர்களுக்கு ஏதாவது சலுகைகள் கொடுக்க வேண்டிய அவசியம் அவர்களுக்குத் தெரியவில்லை. தற்போது உள்ளவர்களில் மிக்ககாரசாரமானவர் காமினி ஈரியகொல்ல ஆவார். தமிழர்களுக்கு ஏற்கனவே அதிக சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. என அவர்கள் வாதிடுகின்றனர். ஆனபடியால் இப்போது தேவைப்படுவது திறமையாக ஒழுங்கு செய்யப்பட்ட யுந்தமே என்பதும் அவரது வாதமாகும். தேசிய பந்தோபஸ்து மந்திரி பதவியை ஏற்பதற்கு காமினி ஈரியகொல்ல தனது விருப்பத்தை வெளிப்படுத்தி உள்ளார். அத்துடன் சில மதகுருமார்கள் ஒற்றை ஆட்சிக் குடியரசை ஆபத்திற்குள் தள்ளவேண்டாம் என ஜே ஆருக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர் மறுபக்கத்தில் ஜே. ஆர் தமிழ்



முதலாளித்துவத் தலைவர்களையும் தமிழ் தீவிரவாத இளைஞர்களையும் அவர்களது ஈழக்கோரிக்கையைக் கைவிடக்கூடிய விதத்தில் திருப்திப்படுத்த முடியுமா? இதைச் செய்வதற்கு அவர் தமிழ் தொழிலாளர் அரைப்பாட்டாளிகள் மத்தியிலிருந்து தமிழ் முதலாளித்துவவாதிகளையும் சிறு முதலாளித்துவவாதிகளையும் வேறுபடுத்தி தமிழ் முதலாளித்துவவாதிகளின் நம்பிக்கையைப் பெற்று அவரது சமூகப் பொருளாதார வேலைத்திட்டத்தின் கீழ் எல்லா இனத்தவர்களையும் ஒன்றிணைக்கும் பணியைத் தொடர்ந்து நடத்தவேண்டும். அதாவது அவர் தமிழ் இனத்திலிருந்து தமிழ் இடதுசாரிகளை வேறு படுத்த வேண்டும். நிச்சயமாக அவர் இன்று மேல் மட்டத் தமிழர்களின் நன்னம்பிக்கையைப் பெற்று அதை வழமையான ஒற்றுமைக்காக பயன்படுத்தக் கூடிய சக்தியற்றவராக இருக்கிறார். எந்தவிதமான கருத்தொற்றுமையையும் அவருக்குத் தமிழ் முதலாளித்துவவாதிகளுடன் ஏற்படுத்திக் கொண்டாலும் அது முற்றிலும் பலமற்றதாகவே இருக்கும். ஏனென்றால் ஏற்கனவே தமிழ் தலைவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களை சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்பைக் கண்டவுடனேயே தூக்கி எறிந்துள்ளார். அரசாங்கப் பாராளுமன்றக் குழுவுக்குக் கூட தனது ஆலோசனைகளை இன்றுவரை அவரால் முன்வைக்க முடியவில்லை, அவர் பாராளுமன்ற உறுப்பினர்களை பொறுமையுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அத்துடன் தமிழ் இளைஞர் குழுக்களை கட்டுப்பாட்டுக்குள் இந்தியா வைத்திருக்கும் என்று உறுத்தியளித்திருக்கிறார். தனக்கு ஆதரவான வலதுசாரி மக்கள் தமிழருக்குவடக்கிலும், கிழக்கிலும் சுய ஆட்சி வழங்குவதையோ அல்லது மலையகத் தமிழருக்கு பிரஜா உரிமை வழங்குவதையோ ஏற்கமாட்டார்கள் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இவ்வாலோசனைகளை அறிவித்தவுடன் சிறிமாவும் பிரேமதாசவும் ஏனைய குறுகிய மனப்பான்மையுடைய பேரினவாதிகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எதிர்க்கத்தொடங்குவார்கள் ஆனபடியால் ஜே. ஆருக்கு முதலாளித்துவ வாதிகளை இணங்க வைக்கமுடியாது. அதேவேளையில தனது கருத்துக்களை அமுலாக்கக்கூடியளவு சமூக ஆதரவும் அவரிடம் இல்லை.

5. தேர்தலை நடாத்தி அதைப்பயன்படுத்தி முதலாளித்துவக் குழுக்கள் மத்தியில் ஒரு உறுதியான உடன்படிக்கைக்கு அவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருக்கு வர முடியுமா? தேர்தல் மக்கள் இயக்கங்களுக்கு கதவுகளைத் திறந்துவிடுவதுடன் அதிலிருந்து உருவாகும் சக்திகள் முதலாளித்துவ அமைப்புக்கே ஆபத்தாயிருக்கும் தேர்தல் உள்நாட்டு யுத்தமாக மாறக் கூடும். அது சிங்களப் பிரதேசங்களில் பிரிவையும் வேற்றுமையையும் ஏற்படுத்தக் கூடும். ஆதலால் இச் சூழ்நிலையில் ஜேஆரை தேர்தலுக்கு உடன்பட வைப்பது சாத்தியமான காரியமல்ல. இக்காரணங்கள் எல்லாம் ஜேஆரின் ஆட்சி கட்டு மீறிய நெருக்கடிக்குள் செல்லுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றன,

6. இச் சூழ்நிலைக்குள்தான் ஜேஆர் ரஜீவுடன் ஆரம்பித்திருக்கும் பேச்சுவார்த்தையின் உண்மையான வடிவத்தை நாங்கள் அறிய வேண்டியிருக்கின்றது. காலம் சென்ற தனது தாயாரின் அனுதாபத்தினாலும் தான் ரஜீவ் பதவிக்கு வந்தார். என்பது உண்மை. இருந்தும் அத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அன்னிய ஏகாதிபத்திய விரோதம் இந்திய தேசிய உணர்வு முதலியவற்றில் உண்மையான தன்மையை நாங்கள் குறைத்துக் கணிப்பிடக்கூடாது. எது எப்படி இருந்த போதிலும் ரஜீவ் மேற்கு தேசத்து உலகவங்கி ச. நா. நி. யின் பொருளாதார சமூக அரசியல் திசைக்கு மேற்கு நாடுகள் பக்கம் திரும்புவதைவிட அவருக்கு வேறுவழியில்லை தற்பேதைய பொருளாதார வீழ்ச்சி அவருக்கு வேறு எந்த வழிக்கும் இடங்கொடுக்கவில்லை இதே வேளையில் இந்தியாவில் வளர்ந்து வரும் பாரிய சமுநாய அமைதியற்ற நிலைமையை அவர் காணக் கூடியதாக இருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் இளைஞரின் இயக்கங்களும் அவர்களின் நடவடிக்கைகளும் அங்குள்ள மற்றும் தமிழர்களினதும் இந்திய மக்கள மத்தியிலும் ஏற்படுத்தும் தாக்கம் ரஜீவுக்கு மிகவும் ஆபத்தானதும், விருப்பமற்றதுமாகும் இலங்கையின் படுமோசமான பொருளாதார நிலையைப் பொறுத்த மட்டில் இந்தியாவும் சோவியத் சார்பு நாடுகளும் அதிமுக்கியமானவை, என ஜே. ஆர். அறிய வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார். குறிப்பாக இவர்களின் உதவியின்றிதேயிலை விற்பனையைக் காப்பாற்ற முடியாது இதே வேளையில் அமெரிக்காவோ அல்லது ஏனைய மேற்கத்திய தேசங்களோ இந்தியாவை முழுதாக வெறுத்து ஜே. ஆரை ஆதரிக்கப் போவதில்லை தமிழ்த் தேசிய இனப்பிரச்சனை ஒரு மார்க்ஸீய ஆபத்தாக மாறுவதாகவிருந்தால் அவர் இந்திய முதாளித்துவத்தைக்



கட்டாயம் நாட வேண்டும். இது தான் இவருக்கு அந்நிய ஏகாதிபத்திய எசமான்களிடமிருந்து கிடைத்த புத்திமதி என்பதில் சந்தேகமில்லை. தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களின் செல்வாக்கைப் பெற்று இலங்கை பூராவும் ஒரு போராட்ட நிலை உருவாகும் என இவர்கள் எண்ணங் கொண்டு இதை சகல வழிகளிலும் எதிர்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்திருப்பார்கள்.

7. ஆதலால் என்ன அடிப்படையில் ஜே. ஆரும் ரஜீவும் உடன்படிக்கைக்கு வந்தார்கள் என அறிவது எங்களுக்கு கஷ்டமான தொன்றல்ல. அன்னிய ஏகாதிபத்தியத்தின் உறுதியான உதவியுடன் ஸ்ரீலங்கா உட்பட தென்இந்தியாவிலுள்ள இடதுசாரிப் போக்குள்ள சக்திகளை அடக்குவதற்கு ஒரு, பொது நோக்குடன் செயல்படுவதென இவர்கள் உடன்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டு முதலாளித்துவமும் அதன் பூரண உதவியை இதற்குக் கொடுகிறது. உடன்படிக்கையின் முக்கியமான அடிப்படை அம்சங்கள் என்ன ஸ்ரீலங்காவிலும் உள்ள தமிழ் மக்தளின் தீவிரப் போக்கை இல்லாமல் செய்வதற்காக தமிழ் தேசிய இனப் பிரச்சனைக்குத் ஒரு தீர்வு தமிழ் மக்களுக்கு இருப்பதாக காட்சியளிக்க வேண்டும். அப்போது அவர்களுக்கு தமிழ் இளைஞரின் இயக்கங்களையும் இடதுசாரிப் போக்கையும் அடக்குவதற்கு வேண்டிய அவகாசம் இங்கும் தமிழ் நாட்டிலும் கிடைக்கும் அப்போது தென் இலங்கையில் எழும்கொந்தளிப்பு நிலைமையைக் கட்டுப்படுத்த வாய்ப்பு கிடைக்கும் அத்துடன் அவருக்கு உலக வங்கியினதும் சர்வதேச நாணயநிதியத்தினதும் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தி மக்களின் நுகர்ச்சிச் செலவைக் குறைத்து பொருளாதாரத்தை தனியார் துறைக்கு மாற்ற முடியும், ரஜீவுக்குக்கூடதனது வேலைத்திட்டத்தின்படி தொழிலாளர் இயக்கத்திற்கு எதிராக வெட்டுக்கொத்துக்களைச் செய்து பொருளாதாரத்தைத் தனியார் துறை ஆக்குவதற்கு வேண்டிய வாய்ப்பு கிடைக்கும். இதுதான் இவர்களின் பொதுவான கனவாகும்.

8. ஜே. ஆருக்கும் ரஜீவுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பது உண்மை ஜே. ஆர். கைப் பொம்மையாகவே அல்லது தனது பேணி வளர்த்த மேற்கு

www.tamilarangam.net



நாட்டு உறவுகளை அனுந்து தனது வலதுசாரி போக்குக்கு ஆபத்து உண்டாக்குவதையோ விரும்பவில்லை. இலங்கையில் தனக்குக் கிடைத்த பிடியை விட்டுக் கொடுப்பதற்கோ அல்லது தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் அதிருப்தியை சம்பாதிப்பதற்கோ ரஜீவ் விரும்பவில்லை. இப்பொதுத் திட்டத்தின் கீழ் தமிழ்த் தலைவர்கள் தங்கள் திட்டங்களைப் பேணி வருகின்றனர் இந்திய முதலாளித்துவ அடிப்படையில் உருவாகிய தேசிய முதலாளித்துவப் பகுதியோ அல்லது மேற்கத்திய சார்பு தரகு முதலாளித்துவ பிரிவுகளோ இரண்டுபட்ட நிலையில் ஜே. ஆரின் அரசின் கட்டுக்கோப்புக்குள் இருக்க விரும்பவில்லை. அவர்கள் உடனடியாகத் தமிழ் இளைஞரின் இயக்கங்களில் இருந்து பிரிந்து ஜே. ஆருடன் சேரப்போவதில்லை, அவர்கள் தமிழ் இன ஐக்கியத்தைப் பாதுகாக்க முயல்வர். ஏதாவது சலுகைகளை வென்றெடுத்தால் அதைத் தங்கள் குறிகோளை அடைய சாதகமாகப் பாவிப்பார்கள். தாங்கள் கொண்டுள்ள சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் எந்த ஒரு சிங்கள முதலாளித்துவ தலைவருக்காகவும் கைவிட மாட்டார்கள். தங்களது குறைந்த பட்சம் மாகாண மட்டத்தில் வெறுமனே இணைக்கும் வாய்ப்புடன் கூடிய மாவட்ட அதிகாரமாயினும் கிடைத்துவிட்டால் பிற்போக்குவாத தமிழ்த்தலைவர்கள் அதை எப்படியாவது பிரிவினைக்காகப் பாவிப்பார்கள். கடைசியில் அவர்கள் தமிழ் இன ஐக்கியத்தை கைவிட்டு தேவைப்பட்டால் தென்இலங்கையில் உள்ள சிங்கள ஆட்சியின் உதயியுடன் தமிழ் இளைஞரின் இயக்கங்களை அடக்குவார்கள்.

9. எனவே தற்போதைய பேச்சுவார்த்தை நடைமுறையில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. தமிழ் இளைஞர் இயக்கங்களை நசுக்குவதற்காக அற்பசொற்ப அதிகாரப் பரவலாக்கம் செய்வதற்கு உடன்படுமாறு ஜே, ஆரின் இனவாத, பிற்போக்குவாத அரசு தமிழ்ப்பகுதிகளில் மிகப் பலம் பெற்று விடும். சென்னையிலுள்ள மத்தியதர வகுப்பினரைத் திருப்திப் படுத்துவதற்காக இலங்கைத் தமிழ்த் தலைவர்களுக்கு சில குறைந்த பட்ச அதிகாரங்களையாவது வழங்கவேண்டும்மென்று ஏதிர்பார் பின் அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும் மேலும் இங்கு நுழையக் கூடாதென்ற வாக்குறுதியை ரஜீவிற்கு அளிக்க வேண்டும், அவ்வாறான வாக்குறுதிகள் ருசிய நண்பர்களையும்



திருப்திப்படுத்தும் தீவிரவாத இளைஞர் இயக்கங்களை மடக்குவதற்காக தமிழ் முதலாளித்துவ தலைவர்கள் தமக்கு போதிய அரசியல் அதிகாரங்களைக் கோருவார்கள். ஜே. ஆருடன் ஒற்றுமையாய் இருப்பது பற்றி எள்ளளவேனும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் அவர்கள் தங்களைத் தலைமைப் பீடத்திலிருந்து அகற்றக்கூடிய அளவு ஒரு தேசிய புரட்சிகர யுத்தம் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள் அதற்கு மாறாக ஏதாவது உறுப்படியான சலுகைகளை அவர்கள் பெற்றால் தமிழ் மக்களின் வெகுஜன இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான செல்வாக்கைப் பெறுவர். தமிழ் முதல்ாளித்துவ தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பரவலாக்கலைப் பெறமுயற்சிக்கின்றார்கள். இதற்கு பழமை விரும்பிகளான விவசாயிகளின் ஆதரவும் கிடைக்கும். இதன் மூலம் தீவிரவாத தமிழ் இளைஞர்களின் இலட்சியங்கள் மழுங்கடிக்கப்படும். பிற்போக்குவாத இராணுவ பொலிஸ் இயந்திரத்தின் ஒரு பகுதியை பெற்றுவிட்டால் அது நவகாலனித்துவ அடிமை அமைப்புடன் கூடிய தனிநாட்டை நோக்கி செல்வதற்குரிய ஆரம்பமாக அமையும். ஏனென்றால் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்குள்ளும் பிற்போக்குவாய்ந்த தரகு முதலாளித்துவத்தின் கை மேலோங்கும். படுபிற்போக்கான அதிகாரப் பரவலாக்கள் உயர்மட்ட தரகு முதலாளித்துவத்திற்கே முக்கியத்துவம் அளிக்கும். ஜே.ஆரின் ஆட்சியின் கீழ் நிலவும் பொருளாதார நிலைமை இத்தன்மைகளை அதிகரிக்கவே செய்யும். அரசின் தற்போதைய தாராள பொருளாதாரக் கொள்கையினால் தனியார் துறையின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. இந்நிலையில் மாவட்ட சபையோ அல்லது எவ்விதமான பிரதேச ஆட்சியோ தரப்போவது வெறுமனே அரசியல் மற்றும் நிர்வாகப் பரவலாக்கல் மட்டுமே. மையத்திலிருந்து விலகிச் செல்லும் பொருளாதார முறை மாவட்டத்தை அல்லது பிரதேசத்தை மத்திய அரசிலிருந்து விலகிச் செல்வதற்கே வழிவருக்கும். தமிழ் முதலாத்ளிதுவம் ஏகாதிபத்தியத்துடன் நெருக்கமான நட்பை வளர்க்கவே விரும்பும். மேலே கூறப்பட்ட பொருளாதார அமைப்பு முறை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுக்குழுவை விட வலுப்பெற்றிருக்கும். அவ்வமைப்பின் கீழ் தேசிய நலன்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீரழிக்கப்பட்டன. இதனுல் நிதியமைச்சர் இவைபற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள புதிதான அதிகாரங்களை நாடவேண்டி வந்துள்ளது.

தமிழ் முதலாளித்துவம் ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்திருந்தாலும் இந்திய முதலாளித்துவத்தை நோக்கிச் செல்வதென்றுலும் சரி தாம் அதிகாரப்பரவலாக்கல் மூலம் பெற்ற வாய்ப்புக்களை முதலாளித்துவத்துடன் ஒட்டி உறவாடுவதற்கே பயன்படுத்தும் தாராளப் பொருளாதாரக் கொள்கை ஏகாதிபத்திய நாடுகளுடன் தொடர்பு கொள்பவர்களுக்கே சாதகமாக இருக்கும். இது ஏகாதிபத்திய அமைப்பின் பொருளாதாரத்தின் அமைப்புடன் இது ஒரு மாகாணத்தை ஏகாதிபத்திய அமைப்பின் பொருளாதாரத்தின் பக்கம் இழுத்துச்செல்லும். எனவே பிற்போக்கு முதலாளித்துவ ஆதிக்கத்தின் ஜே. ஆரின் தாராளப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பெறப்படும் அதிகாரப் பரவலாக்கல் தமிழ் பகுதிகளை பிற்போக்குவாத ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகளாகவே ஆக்கப்படும். இது தமிழ் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் தமிழ் இளைஞர்கள் ஆகியோரைப் புறக்கணித்தே செயல்படும் மேலும் இது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு சிறு வெற்றியாகக்கூட அமையாது. மாருக இது ஒரு மோசமான எதிர்ப்புரட்சியாக அமைவதுடன், தமிழ் இளைஞர்கள் நிராயுதபாணிகளாக்கப்படுவதுடன், தமிழ் தொழிலாளர்களும் விவசாயிகளும் நசுக்கப்படுவார்கள். இவை எல்லாம் தமிழ் ஈழத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விற்பனை செய்வதற்காகவே நடைபெறும்.

இத்தகைய நடைமுறையில் தமிழ் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பொறுத்தமட்டில் எவ்விதமான சுயாட்சியோ சுயநிர்ணய உரிமையோ இருக்க மாட்டாது, பிற்போக்குவாத தமிழ் முதலாளித்துவவாதிகள் தமக்கு ஏதாவது ஒரு விதத்தில் கணிசமான அளவு அரசதிகாரங்களை தமிழ் இனத்திற்கு பிரியாவிடைச் சொல்வார்கள், அவர்கள் இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் எவரிடமிருந்தும் பெறும்உதவிகளைதடுத்து நிறுத்துவார்கள். தமிழ் பிற்போக்குவாத முதலாளித்துவவாதிகள் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு இராணுவ அல்லது கடற்படைத் தளத்



தையோஏகாதிபத்தியத்திற்கு வழங்கத்தயங்கமாட்டார்கள். அவர்கள் காணும் சிங்கப்பூர் அல்லது இஸ்ரேல் என்னும் கனவை நோக்கியே நடவடிக்கை எடுப்பார்கள். இந்தியாவையும் தமிழ் நாட்டையும் நம்பி இருக்கும் பிரிவினர்கள் கூட ஒதுக்கப்படுவார்கள். இதில் வேதனைக்குரிய விடயம் யாதெனில் தமிழ் தேசியவாதிகளைப் பொறுத்தமட்டில் தமிழ் முதலாளித்துவவாதிகளின் இக்கனவு கூட பலிக்காததே. தமிழ் இடதுசாரி சக்திகளும் தென்னிலங்கைத் தொழிலாளர்களும், விவசாயிகளும் இத்தகைய நிலை உருவாவதைத் தடுக்கத் தவறினுல் ஜே. ஆரின் பொனபாட்டிச சர்வாதிகாரத்திற்கு எவ்வித பயனுமின்றி தமிழ் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தலே பெரும்பாலும் நடைபெறும். தமிழ் இளைஞரின் இரத்தித்தின் மீதே ஜே. ஆர். ரஜீவ் மற்றும் பிற்போக்குவாதத் தலைவர்கள் ஓரிணக்கத்திற்கு வருவார்கள். அவ்விணக்கம் தென்னிலங்கையிலுள்ள தீவிரவாதிகளின் பெரும் எதிர்ப்பைச் சந்திக்க ஜே. ஆருக்கு போதிய சக்தியை அளிக்கும். இதில் பிரதானமாக தென்னிலங்கையிலுள்ள சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் அடங்குவர். தமது விடுதலைக்காக அளப்பரிய தியாகங்களைச் செய்த தமிழ் மக்கள் ஜே. ஆரின் பொனபாட்டிச ஆட்சியிலிருந்தோ, தமிழ் முதலாளித்துவவாதிகளிடமிருந்தோ எவ்வித நன்மையையோ எதிர்பார்க்க முடியாது. நோக்கங்கள், போராட்ட வழிமுறைகளையோ பொறுத்தளவில் தமிழ் இளைஞர்கள் நிச்சயமாக பிழைகளைச் செய்திருந்தனர். என்பதை திரும்ப, திரும்ப சுட்டிக்காட்டியுளோம். பின்பு அவர்கள் தமிழ்மக்களையே ஆயுதபாணிகளாக்குமளவிற்குநிர்ப்பந்திக்கப்பட்டனர். அரசுக்கு எதிரான சிங்கள மக்கள் மத்தியில் இவர்களுக்கு நிச்சயம் செல்வாக்குண்டு. அதே நேரத்தில் இந்தியாவில் சுதந்திரமாக இடதுசாரி நோக்குள்ள தமிழ் இளைஞர்கள் செயல்படும் ஆபத்தை ரஜீவ் கூட உணர்ந்துள்ளார்.

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சியே அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்குத் தள்ளியதற்கு மிக முக்கியமான காரணம். தமிழ் மக்களின் சுய நிர்ணயஉரிமையைப் பற்றி நவசமசமாஜக் கட்சி நிலைப்பாட்டினை மூன்று கட்சி இடதுசாரி முன்னணி ஏற்காவிட்டாலும் அக் கட்சிகள் தெளிவான முறையில் பிரதேச சுயாட்சியை ஆதரித்து நிற்கின்றன. நாம் வளைந்து கொடாமல் விடாப்பிடியாகத் தமிழ் மக்களின் உரிமைக்காகவும்

www.tamilarangam.net



ஒன்றிணைந்த போராட்டத்தின் மூலம் ஜே. ஆரின் அரசை தூக்கி எறிவதற்கு செயல்பட வேண்டுமென்ற நிலைப்பாடு பலனளித்துள்ளமை தெளிவாகிறது, தொழிலாளி வர்க்கம் இனவாதத்தை மதிக்காமல் முன்னேறுகிறது. ஜேஆரின் நிவாரண வெட்டுக்களும் தனியார்துறைப்படுத்தும் நடவடிக்கைகளும் தொடருமானால் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து போராடும் நிலைமை உருவாகும். இத்தகைய நிலைமை உருவாவதையே ஜேஆரும் அவரின் கையாட்களும், வடக்கு தெற்கு மார்க்சீயவாத சதி என் புலம்புகிறார்கள். அநுராதபுர சம்பவம் கூட அரசாங்கத்துக்கு எதிரான தாக்கத்தை வலுப்படுத்தியதே தவிர இனக்கலவரத்தை ஏற்படுத்தவில்லை. இராணுவ சட்டத்தைப் பிறப்பித்தோ, அரைப்பாசிச இளைஞர்களை ஆயுதம் ஏந்தச் செய்ய வலதுசாரிப் பிரிவினர் எடுத்த முயற்சிக்கு எதிர்ப்பு கிளம்பியது. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டி ஒரு வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தொண்டமான் தள்ளப்பட்டார். இவ்வாறான கொந்தளிப்பான நிலைமையை எதிர்நோக்கிய ஜே. ஆர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மழுக்கும் முகமாக பேச்சுவார்த்தைகளை நாடினார். இந்தியா மற்றும் தமிழ் முதலாளித்துவவாதிகளின் உதவியோடு தமிழ் மக்களை நிராயுதபாணிகளாக்கி முடக்கிவிடுவதே ஜே ஆரின் ஒரேயொரு நோக்கமாகும். இதன் மூலம் தென்னிலங்கை தொழிலாளிவர்க்கத்துடனும் மற்றும் தீவிரவாதச்சக்திகளுடனும் போர் தொடுப்பதே அவரின் நோக்கமாகும்.

சகல இனங்களுக்குள்ளும் சுரண்டப்படும் வர்க்கங்களுக்கெதிரான மேற்படி சதியை அம்பலப்படுத்துவதற்கு சிங்கள தமிழ் இடதுசாரிகள் ஒன்றுபடவேண்டும். என்று நாம் வேண்டுகிறோம். பேச்சுவார்த்தைகளில் யாராவது பங்குபற்றினால் அது ஜேஆரை அம்பலப்படுத்தி ஜேஆருக்கும் பிற்போக்குவாத தமிழ் முதலாளித்துவத்துக்கும் இடையில் ஏற்படக்கூடிய எதிர்ப்புரட்சி தன்மை கொண்ட சமரசத்தை முறியடிப்பதற்குமாய் இருத்தல் வேண்டும். ஏதாவது சலுகைகள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டால், சிங்கள இடதுசாரிகள் நிச்சயமாக நிபந்தனையின்றி அவற்றைப் பாதுகாக்க வேண்டும். அவற்றை எதிர்க்க முற்படும் சிங்களபாசிச இனவாதிகளுக்கெதிராக முன்னணியில் நின்று போராட வேண்டும். மக்களுக்கு அறிவூட்டுவதற்கு அது



பெரிதும் உதவும். ஆனால் ஜேஆருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படியானால் இரு இனங்களிலும் உள்ள பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கு எதிரான பொனபாட்டிச கொலைத்திட்டத்தை ஆதரிப்பதற்குச் சரியாகும் நெருக்கடி நிரம்பிய பொனபாட்டிச ஆட்சியின் எதிர்ப்புரட்சி சதித் திட்டத்துக்கு இடதுசாரிகள் ஆதரவை அளிக்க முடியாது. அது மட்டுமல்லாது அதை அவர்கள் அம்பலப்படுத்தவும் வேண்டும். இடதுசாரிகள் ஒன்றுகூடி ஒரு உண்மையான, இரு இனங்களுக்கும் இடையில் முற்றுமுழுதான. ஜனநாயக ரீதியிலான புரிந்துணர்வின் அடிப்படையில் ஐக்கியப்படுவது சாத்தியமான காரியம், என்று தெளிவாக எடுத்துக் காட்டுது, குறிப்பாக இடதுசாரி இயக்கத்தின் பணியாகும்.

கீழ் கூறப்பட்டுள்ள கொள்கையின் அடிப்படையில் ஒற்றுமை பேணப்பட முடியும். என்ற நிலைப்பாட்டை ந. ச. ச. கட்சி முன்வைத்துள்ளது.

1. சகல பிரஜைகளுக்கும் சமத்துவம், இனமத ரீதியிலான புறக்கணிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும். நாட்டில் நிரந்தரமாக வசிப்பவர்கள் சகலருக்கும் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும்.

2. பிரதேச சுயாட்சி - வெவ்வேறு மக்கட் பிரிவுகள் தம்மைத்தாமே ஆளும் உரிமை உடையவர்கள்.

3. சுய நிர்ணய உரிமை - ஒவ்வொரு இனமும் தனது தலைவிதியை நிர்ணயிப்பதற்கான உரிமையை ஏற்றுக்கொள்ளல். ஒற்றுமை என்பது முற்றிலும் சுய விருப்பத்தின் அடிப்படையில் அமைய வேண்டுப்.

மேற்படி அடிப்படையில் நாம் கீழே குறிப்பிட்ருக்கும் வேலைத்திட்டத்தை முன் வைத்துள்ளோம்.

1. பிரிந்து செல்லும் உரிமை அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். அதாவது ஒற்றுமை இரு பகுதியினரும் சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே தங்கியிருக்கிறது என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டுவதற்காக. இலங்கை தமிழ் மக்களுக்கு இரு நாட்டில் ஒரு தாயகம் என்றும் பிரிக்க முடியாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமை இருக்கிறதென்பதை இது தெளிவாக வெளிப்படுத்தும். அத்தோடு ஒருவராலும் மேலதிகமாக செலுத்தப்படாமல் திணிக்கப்படாமல் திணிக்கப்படாத வெறுப்புத்தன்மை அற்ற ஒற்றுமை இருப்பதையும் இது காட்டும்.

2. சமத்துவமும், பிரஜா உரிமை, வேலைவாய்ப்பு, கல்வி காணி வழங்கள் மற்றும் குறிப்பாக தேசிய ஆயுதப்படைகள் ஆகியவை சம்பந்தமாக புறக்கணிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், மலையக மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கள்.

3. பிரதேச பாதுகாப்பு அல்லது பொலிஸ் நிர்வாகம், குடியேற்றம், கல்வி ஆகியவற்றின் மீது அதிகாரங்களுடன் கூடிய தமிழ் பேசும் பகுதிகளுக்கான சுயாட்சி முறை. ஏனைய பகுதிகளிலுள்ள சிறுபான்மையினருக்கு ஊர்காவற்படை அல்லது பாதுகாப்பு குழுககள்.

4. மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு தமிழ் மொழியை உபயோகிக்கும் உரிமை.

தமிழ் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய வருமானத்தில் ஒரு நியாயமான பகுதியை ஒதுக்குதல்.

இந்த அடிப்படையில் அரசாங்கத்துக்கு சவால் விடக்கூடியதொரு ஐக்கியமான இடதுசாரி இயக்கத்தை நாடு பூராகவும் கட்டியெழுப்ப முடியும். ஜே. ஆரின் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைப்பவர்களை நாங்கள் கேட்பது யாதெனில், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு என்னவிதமான உத்தரவாதம் இருக்கிறது என்பதே? இன்று தமிழ் மக்கள் பெருமளவிலான அழிவிலிருந்துத் தவிர்க்கப்பட்டிருப்பது அவர்கள் ஆயுதபாணிகலாயிருப்பதாலேயே. தொழிலாளி வாக்கத்தின் பலமே இதில் பிரதானமாகும் மலையகத் தமிழ் மக்கள் ஆயுதம் கோருகின்றனர். தொண்டமானும் ஆயுதம் தரித்த ஊர்க்காவல் படையினர் வேண்டுமென்கிறார். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு ஆயுதம் அவசியமென்பதையே தமிழ் அமைச்சர்கள் வலியுறுத்துகின்றனர் என்பது தெளிவாகிறது. அரசாங்கத்தையும் தமிழ் முதலாளித்துவவாதிகளையும் நாம் கேட்பது இது தான். வடக்கு கிழக்கில் ஆயுதபாணிகளான தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?



மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள ஊர்காவற் படையினருக்கு என்ன நடக்கும்? குறைந்தபட்சம் ஒரு தமிழ் இராணுவப்பிரிவை ஏற்படுத்தி இப்பிரிவுக்கு வேறான ஆயுதத்தை இவர்களால் வழங்க முடியுமா? இப்போது சிங்க, கெமுனு, கஜபா பிரிவுகள் இருப்பது போல் குடியேற்ற ஆட்சிக்கால தமிழ்த் தலைவர்களில் யாராவது ஒருவரின் பெயர் (உதாரணம்: சங்கிலி, இராமநாதன்) சூட்டப்பட்ட பிரிவு அமைக்கப்படுமா? ஊர்காவற்படை ஒரு நிரந்தரமான அம்சமாகுமா? இவை மிகவும் அவசியமான கேள்விகள். ஏனென்றால் மேலும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு முன்பு சிந்திக்க வேண்டியது யாதெனில் தமிழ் மக்கள் உயிர்வாழ்வதற்கு உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். பொனபாட்டிச சர்வாதிகார ஆட்சியாளனிடம் இதற்கு பதில் கிடையாது. ஆகையால்தான் ஜே. ஆர். ஒன்றையும் வெளியிடுகிறாரில்லை.

ஜே. ஆர் தோல்வி கண்டால் வலதுசாரிப்பிரிவிலிருந்தும் ஆபத்து வரும். ஜே. ஆர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன் வீழ்ந்தால் பிரேமதாச பெரும்பான்மையுடன் பதவியேறுவார். அல்லது ஒரு வலதுசாரிச் சதி நடைபெறலாம். எவ்வாறாயினும் அந்நியர் தலையீட்டுடனான உள்நாட்டு யுத்தம் ஒன்றை முடுக்கிவிடுவதைத் தவிர வல்துசாரிப்பிரிவிலிருந்து எந்தவிதப் பரிகாரமும் இல்லை. ஆனால் இடதுசாரிக்கட்சிகளும்; தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களும் இச்சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

மறுபுறத்தில் ஜே. ஆர் பாராளுமன்றத்தைக் கலைக்க நிர்ப்பந்திக்கப்பட்டு புதிய பாராளுமன்றம் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரலாம். ஆனால் அது நெருக்கடி நிலையை ஒத்தி வைக்கவும், தளர்ச்சி நிலை பெருகவுமே உதவும். தேர்தலை இடதுசாரிகள் ஒரு மாற்று வழிகாட்ட உபயோகிக்கலாம். இந்த முதலாளித்துவ அரசாங்கத்தை வீழ்த்தி ஒரு புரட்சிகர இடதுசாரி அரசாங்கத்தை நிறுவுவதே ஒரே ஒரு வழியென்பதை நாம் சகல இன மக்களுக்கும் விளக்க வேண்டும். அத்தகைய ஒரு அரசாங்கம் தொழிலாளர், விவசாயிகள், போர்வீரர்கள் கொண்ட சபைகளை அடிப்படையாகவும், உயர்மட்ட அதிகார பரவலாக்களும், ஜனநாயகமும் கொண்டதாயிருக்கும். மேலும் அப்படியானதொரு அரசாங்கத்தை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமை இருக்கிறதென்பதை இது தெளிவாக வெளிப்படுத்தும். அத்தோடு ஒருவராலும் மேலதிகமாக செலுத்தப்படாமல் திணிக்கப்படாமல் திணிக்கப்படாத வெறுப்புத்தன்மை அற்ற ஒற்றுமை இருப்பதையும் இது காட்டும்.

2. சமத்துவமும், பிரஜா உரிமை, வேலைவாய்ப்பு, கல்வி காணி வழங்கள் மற்றும் குறிப்பாக தேசிய ஆயுதப்படைகள் ஆகியவை சம்பந்தமாக புறக்கணிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், மலையக மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கள்.

3. பிரதேச பாதுகாப்பு அல்லது பொலிஸ் நிர்வாகம், குடியேற்றம், கல்வி ஆகியவற்றின் மீது அதிகாரங்களுடன் கூடிய தமிழ் பேசும் பகுதிகளுக்கான சுயாட்சி முறை. ஏனைய பகுதிகளிலுள்ள சிறுபான்மையினருக்கு ஊர்காவற்படை அல்லது பாதுகாப்பு குழுககள்.

4. மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு தமிழ் மொழியை உபயோகிக்கும் உரிமை.

தமிழ் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய வருமானத்தில் ஒரு நியாயமான பகுதியை ஒதுக்குதல்.

இந்த அடிப்படையில் அரசாங்கத்துக்கு சவால் விடக்கூடிய தொரு ஐக்கியமான இடதுசாரி இயக்கத்தை நாடு பூராகவும் கட்டியெழுப்ப முடியும். ஜே. ஆரின் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைப்பவர்களை நாங்கள் கேட்பது யாதெனில், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு என்னவிதமான உத்தரவாதம் இருக்கிறது என்பதே? இன்று தமிழ் மக்கள் பெருமளவிலான அழிவிலிருந்துத் தவிர்க்கப்பட்டிருப்பது அவர்கள் ஆயுதபாணிகலாயிருப்பதாலேயே. தொழிலாளி வாக்கத்தின் பலமே இதில் பிரதானமாகும் மலையகத் தமிழ் மக்கள் ஆயுதம் கோருகின்றனர். தொண்டமானும் ஆயுதம் தரித்த ஊர்க்காவல் படையினர் வேண்டுமென்கிறார். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு ஆயுதம் அவசியமென்பதையே தமிழ் அமைச்சர்கள் வலியுறுத்துகின்றனர் என்பது தெளிவாகிறது. அரசாங்கத்தையும் தமிழ் முதலாளித்துவவாதிகளையும் நாம் கேட்பது இது தான். வடக்கு கிழக்கில் ஆயுதபாணிகளான தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?



மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள ஊர்காவற் படையினருக்கு என்ன நடக்கும்? குறைந்தபட்சம் ஒரு தமிழ் இராணுவப்பிரிவை ஏற்படுத்தி இப்பிரிவுக்கு வேறுன ஆயுதத்தை இவர்களால் வழங்க முடியுமா? இப்போது சிங்க, கெமுனு, கஜபா பிரிவுகள் இருப்பது போல் குடியேற்ற ஆட்சிக்கால தமிழ்த் தலைவர்களில் யாராவது ஒருவரின் பெயர் (உதாரணம்: சங்கிலி, இராமநாதன்) சூட்டப்பட்ட பிரிவு அமைக்கப்படுமா? ஊர்காவற்படை ஒரு நிரந்தரமான அம்சமாகுமா? இவை மிகவும் அவசியமான கேள்விகள். ஏனென்றுல் மேலும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு முன்பு சிந்திக்க வேண்டியது யாதெனில் தமிழ் மக்கள் உயிர்வாழ்வதற்கு உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். பொனபாட்டிச சர்வாதிகார ஆட்சியாளனிடம் இதற்கு பதில் கிடையாது. ஆகையால்தான் ஜே. ஆர். ஒன்றையும் வெளியிடுகிறுரில்லை.

ஜே. ஆர் தோல்வி கண்டால் வலதுசாரிப்பிரிவிலிருந்தும் ஆபத்து வரும். ஜே. ஆர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன் வீழ்ந்தால் பிரேமதாச பெரும்பான்மையுடன் பதவியேறுவார். அல்லது ஒரு வலதுசாரிச் சதி நடைபெறலாம். எவ்வாறுயினும் அந்நியர் தலையீட்டுடன உள்நாட்டு யுத்தம் ஒன்றை முடுக்கிவிடுவதைத் தவிர வலதுசாரிப்பிரிவிலிருந்து எந்தவிதப் பரிகாரமும் இல்லை. ஆனுல் இடதுசாரிக்கட்சிகளும்; தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களும் இச்சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

மறுபுறத்தில் ஜே. ஆர் பாராளுமன்றத்தைக் கலைக்க நிர்ப்பந்திக்கப்பட்டு புதிய பாராளுமன்றம் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரலாம். ஆனுல் அது நெருக்கடி நிலையை ஒத்திவைக்கவும், தளர்ச்சி நிலை பெருகவுமே உதவும். தேர்தலை இடதுசாரிகள் ஒரு மாற்று வழிகாட்ட உபயோகிக்கலாம். இந்த முதலாளித்துவ அரசாங்கத்தை வீழ்த்தி ஒரு புரட்சிகர இடதுசாரி அரசாங்கத்தை நிறுவுவதே ஓரே ஒரு வழியென்பதை நாம் சகல இன மக்களுக்கும் விளக்க வேண்டும். அத்தகைய ஒரு அரசாங்கம் தொழிலாளர், விவசாயிகள், போர்வீரர்கள் கொண்ட சபைகளை அடிப்படையாகவும், உயர்மட்ட அதிகார பரவலாக்களும், ஜனநாயகமும் கொண்டதாயிருக்கும். மேலும் அப்படியானதொரு அரசாங்கத்தை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள

www.tamilarangam.net



இடதுசாரி நோக்குள்ளவர்கள் (உதாரணம்:- தொழிலாளர், விவசாயிகள்) ஆதரிப்பார்கள். இதன்மூலம் தமிழ் இனமும் (சிங்கள இனத்தைப் போலவே) தமிழ் முதலாளித்துவ தலைமை யிலிருந்து பிரிந்துவிடும். இடதுசாரிக் கட்சிகள் மூலம் தமிழ் சிங்கள தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையைக் கட்டி வளர்த் தால் அது ஒ ந ஐக்கிய இலங்கைக்கு பலமான அரசியல் தள மாக அமையும். வர்க்க ஒற்றுமை மீதான நம்பிக்கை தேசிய உணர்வுகளுக்கு மேலோங்கும். மறுபுறத்தில் மேற்படி திட்டத் தைச் செயற்படுத்தினால் இலங்கையில் எந்த ஒரு இனத்தின தும் தனித்துவத்தைப் பாதிக்காமல் ஒற்றுமை வலுப்படுத்தப் படும். அப்படியானதொரு அரசாங்கத்தின் கீழ் ஒருபோதும் சாதாரண மக்கள் பயமுறுத்தப்படமாட்டார்கள்.

அதே நேரத்தில் ஒரு இடதுசாரி அரசாங்கம் திறந்த பொருளாதார முறைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். இறக்கு மதி, ஏற்றுமதி, மொத்த வியாபாரம், வங்கித்துறை உட்பட சகல பெரிய முதலாளித்துவ உடமைகளும் தேசியமயப்படுத்தப் படும். அத்தகைய சூழ்நிலையில் அரசியல் நிர்வாகப் பரவலாக்கல் பிரிந்து செல்லும் தன்மையை ஏற்படுத்தாது. மாறாகப் பொருளா தாரத் தாக்கங்கள் நெருக்கமான ஒத்துழைப்புக்கேவழிவகுக்கும். மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தும் போது சகல இன மக் கள் மத்தியிலும் நம்பிக்கை வலுவடைவதுடன் எல்லா மக்களி னதும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு இனங்களுக்கும் (ஏகாதிபத்தியத்தின் கட்டளைப்படி நடைபெறும்) 'திறந்த'' பொருளாதார முறைக்கு எதிரான மக்கட் பிரிவின ருக்கும் இடையில் திட்டமிட்ட பொருளாதார ஒற்றுமைக்கு வித்திடும்.

இந்திய முதலாளித்துவத்தின் சவாலையும் எதிர்கொண்டே நாம் அத்தகையதொரு அரசாங்கத்தை அமைக்கலாம், இதில் நாம் வெற்றியடையவேண்டுமானால் இந்திய முதலாளித்துவம், அநேகமாக ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற போர் வையில் ஏகாதிபத்திய எசமான்களின் முழு ஆதரவுடனும் இங்கு தலையீடு செய்ய இடமுண்டு, அத்தகைய நிலை வருமானால் இந்திய தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அறைகூவல் விடுவதற்கு தமிழ் இடதுசாரிகளும், தொழிலாளர் ஸ்தா



பனங்களுமே உண்மையான மேடையாக அமையும். அவ்வழியூ டாகப் புரட்சிகர அறைகூவல் முழு இந்திய உபகண்டத்திற்கும் விஸ்தரிக்கப்படும். இப்பொழுது கூட ஜே. ஆர், ரஜீவ் பேச்சு வார்த்தைகளின் பின்னணியில் என்ன படமிருக்கிறதென்பதை தமிழ் நாட்டு மக்களுக்குச் சுட்டிக்காட்டுவது தமிழ் இடதுசாரி களின் கடமையாகும். பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் என்ற போர்வையில் இந்திய முதலாளித்துவவாதிகள் ஜே. ஆருடன் ஒத்துழைத்துத் தமிழ் இளைஞர்களை நசுக்குவதற்கு முனைவதை நாம் அம்பலப்படுத்த வேண்டும். பாதுகாப்புக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் தமிழ் அகதிகளை (இந்தியாவிலிருந்து) வெளியேற்ற முற்படுவதை நாம் அம்பலப்படுத்த வேண்டும். சிங்கள தமிழ் இடதுசாரிகள் ஒன்றுபட்டு அத்தகையதொரு ஒன்றிணைக்கப்பட்ட பிரசாரத்தை மேற்கொண்டால் இங்கும் இந்தியாவிலும் வெற்றிகிட்டுவது நிச்சயம்.

**கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்ன**

பொதுச் செயலாளர்-நவ சமசமாஜக் கட்சி.

20/06/85

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வாசிக்கத் தவறாதீர்கள்

# “இடதுசாரி”

நவ சமசமாஜக் கட்சியின் மாத இதழ்

---

வெகு விரைவில் வெளிவருகிறது

# ‘நவ சமசமாஜக் கட்சியும் தமிழ் பேசும் மக்களும்’

ஆசிரியர்

## கலாநிதி: விக்கிரமபாகு கருணாரத்ன

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

நவ சமசமாஜக் கட்சி

17, பெரக்க வழி

கொழும்பு-2.

2/-

Menik Printers & Publishers Colombo-2.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்